# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:151 ★01.10.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:151 ★01.10.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai




## "விளையாட்டில் வெற்றி பெற்றால் வாழ்விலும் உயரலாம்!" - 2,718 வீரர்-வீராங்கனைகளுக்கு பரிசு வழங்கி ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுரை

"விளையாட்டு உடல் நலத்தையும், மனநலத்தையும், சுய ஒழுக்கத்தையும் காக்கும் சிறந்த வழியாகும். மாணவர்கள் விளையாட்டில் கவனம் செலுத்தி கடினமாக முயற்சி செய்து வெற்றி பெற்று வாழ்வில் உயர்ந்த இடத்தை அடைய வேண்டும்" என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்தார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மக்கள் குறைதீர்வு கூட்டரங்கில் இன்று (30.09.2026) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை 2026 விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். போளூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.அபிஷேக் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் ஆட்சியர் வந்தனா கார்க் பேசியதாவது:

"விளையாட்டு என்பது உடல் நலம், மனநலம் மற்றும் சுய ஒழுக்கத்தை காக்கின்ற சிறந்த வழியாகும். மாணவர்கள் அனைவரும் விளையாட்டில் கவனம் செலுத்தி,

கடின முயற்சி செய்து போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று உயரிய இடத்தை அடைய வேண்டும். தமிழ்நாடு அரசு விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக் கொண்டுவிளையாட்டில் சாதித்து வாழ்க்கையில் மேன்மையடைய வேண்டும்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்று மாநில அளவிலான போட்டிகளுக்கு தேர்வாகியுள்ள வீரர், வீராங்கனைகள், தாங்கள் பங்கேற்க உள்ள போட்டிகளில் வெற்றி பெற்று திருவண்ணாமலை மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும்" என வாழ்த்து தெரிவித்தார்.

### 1.74 லட்சம் பேர் பதிவு – 2,718 பேர் வெற்றி

திருவண்ணாமலை மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை 2026 விளையாட்டுப் போட்டிகளுக்காக 1,74,443 பேர் பதிவு செய்திருந்தனர். இதில் பள்ளி மாணவ, மாணவியர்கள் 93,544 பேரும், கல்லூரி மாணவ, மாணவியர்கள் 28,748 பேரும், மாற்றுத்திறனாளிகள் 1,763 பேரும், அரசு ஊழியர்கள் 5,339 பேரும், பொதுப்பிரிவினர் 45,060 பேரும் அடங்குவர். பதிவு செய்தவர்களில் 53,659 பேர் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றனர். அவர்களில் 2,718 வீரர், வீராங்கனைகள் வெற்றி பெற்றனர்.

அவர்களுக்கு பரிசுகளும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மாநில போட்டிக்கு 612 பேர் தேர்வு

மாவட்ட அளவிலான போட்டிகளில் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களில் 308 பேரும், கல்லூரி மாணவ, மாணவியர்களில் 304 பேரும் என மொத்தம் 612 வீரர், வீராங்கனைகள் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பல்வேறு பிரிவுகளில் முதலிடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.3,000, இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.2,000, மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.1,000 பரிசுத்தொகையுடன் பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனை களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 09.09.2026 முதல் 28.09.2026 வரை தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, சிலம்பம், கையுந்துபந்து, இறகுப்பந்து, கைப்பந்து, பால் பேட்மிண்டன், மேசைப்பந்து உள்ளிட்ட 45 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், மண்டல முதுநிலை மேலாளர் சாந்தி, மாவட்ட விளையாட்டு அலுவலர் சண்முகப்பிரியா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பாடியநல்லூர் ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி வைபவம் நிகழ்ச்சி

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி பிள்ளையார் கோயில் தெருவில் அமைந்திருக்கும்



அருள்மிகுஸ்ரீசெல்வவிநாயகர்ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி வைபவம் நிகழ்ச்சி ஆன்மீக சிந்தனையாளர் ஓ. கே.பாபு மற்றும் ஆலய பொறுப்பாளர்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மூலவர் ஸ்ரீ செல்வ விநாயகர் சுவாமிக்கு பால், தயிர், இளநீர், மஞ்சள், குங்குமம், பன்னீர், சந்தனம், தேன், ஜவ்வாது உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

பின்னர் உற்சவருக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.

பின்னர் மேளதாளத்துடன் ஆலய மாடவீதி உலா நடைபெற்றது.

இதில் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

# கைவிரல் ரேகை பதிவு இல்லாவிட்டாலும் அனைத்து குடும்ப அட்டைக்கும் ரேஷன் பொருள் வழங்கப்படும்: தமிழக அரசு

தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: ரேஷன் கடைகளில் 6 மாதங்களுக்கு மேல் பொருட்கள் வாங்காத பிஎச்எச், ஏஏஒய் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்குவதை இன்று (அக்டோபர் 1) முதல் தற்காலிகமாக மத்திய அரசு தடை செய்துள்ளது. அதேநேரம் எந்த குடும்ப அட்டைதாரருக்கும் பொருட்கள் வழங்குவதை நிறுத்தக் கூடாது என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.



தமிழகத்தில் குடும்ப அட்டைதாரர்களின் கைவிரல் ரேகைப்பதிவு (e KYC) 96.69 சதவீதமாகும். அரசின் சார்பில் கைவிரல் ரேகைப் பதிவுக்காக பல்வேறு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. ஜூலை மாதம் 95.44% இருந்த கைவிரல் ரேகை பதிவு சரிபார்ப்பு, நேற்று 96.69% உயர்ந்துள்ளது. இதன் மூலமாக 4 லட்சத்து 49,663 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். எனினும், கைவிரல் ரேகைப்பதிவு செய்யாத குடும்ப அட்டைதாரர்கள், ரேஷன் கடைக்கு செல்லும் போது, கை விரல்ரேகை, கண்கருவிழி சரிபார்ப்பின் மூலம் தங்கள்தகவல்களைபதிவு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திமுகவின் கிளையாக அதிமுக மாறிவிட்டது: முதல்அமைச்சர் விஜய்

தாராபுரத்தில் வருகிற 6ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து முதல் அமைச்சர் விஜய் இன்று பிரசாரம் செய்தார்.

பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:

என் நெஞ்சில் குடியிருக்கும் தாராபுரம் தொகுதி மக்கள் அனைவருக்கும் வணக்கம்.. வணக்கம்... வணக்கம்... கொங்கு நாட்டு தங்கங்களே... கொங்கு நாட்டு சிங்கங்களே... என்சொந்தங்களே.. இங்கு நான் முதல்அமைச்சராக வரவில்லை; உங்கள் வீட்டு பிள்ளையாக... உறவாக.. மகனாக... தாய் மாமனாக வந்துள்ளேன். ஊழல் ஒழிப்பில் முனைப்போடு உள்ளோம். வாக்குறுதிகளிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகிறோம். இன்னும் நாங்கள் தான் முதல்அமைச்சர், நாம் தான் அதிகாரத்தில் இருக்கிறோம் என சிலர் நினைக்கின்றனர். இன்னும் நாங்கள் தான் மன்னராட்சி மனப்பான்மை எனக்கு இல்லை. தீய சக்தி திமுகவுடன் அதிமுக மறைமுக கூட்டணி. தீய சக்தி திமுகவின் பினாமிபோல் சுய நலமாக சுற்றுபவர்கள்நாம் கிடையாது. மக்களின் நம்பிக்கையை காப்பாற்றுவோம். மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்தவே அரசியலுக்கு வந்துள்ளோம்.

கடவுள் நம்பிக்கை எங்களுக்கு உண்டு, யாருடைய கடவுள் நம்பிக்கைக்கும் நாங்கள் எதிரான வர்கள் அல்ல. கிருஷ்ண ஜெயந்திக்கும், கிறிஸ்துமசுக்கும், பக்ரீத்துக்கும் நாங்கள் வாழ்த்து சொல்வோம். மற்றவர்கள்போல்வெளிவேஷம் போட்டுக் கொண்டு பம்மிக் கொண்டு திமுக போல் இருக்க மாட்டோம். அண்ணா காலத்தில் எளியவர்களை நிறுத்தி மன்னர்களை தோற்கடித்ததாக திமுகவின் துரைமுருகன் பேசுகிறார்.

துரைமுருகன் கூறியது போல் எளியவர்களை நிறுத்தி தான் மன்னர்களை தோற்கடித்தது தவெக. கொளத்தூர் மக்களுக்கு கையெடுத்து கும்பிட்டு கோடான கோடி நன்றி எனக் கூறுகிறார் மு.க.ஸ்டாலின்.

திமுக ஆட்சியில் நிறைய தவறுகள் நடந்திருக்கிறது, அதனால் தான் கொளத்தூரில் ஓட்டு



போடவில்லை. இனி ஒவ்வொரு தேர்தலிலும் ஸ்டாலின் கோடான கோடி நன்றி எனக் கூறிக் கொண்டேதான் இருக்க வேண்டும். மு.க. ஸ்டாலின்அவன், இவன் என ஒருமையில் பேசுகிறார்,

நான் பாசமாக பேசுகிறேன். ஆபாச நதி, வன்ம நதியை வளர்த்து வைத்திருக்கிறார் ஸ்டாலின், நீங்கள் பேசப் பேச நாங்கள் உயர்வோம். தரம் தாழ்த்தி பேசப் பேச தவெக உயர்ந்து கொண்டே இருக்கும்.

மக்கள்தீர்ப்புக்குதலை வணங்குவதாகக் கூறுபவர். தீர்ப்பை மதிக்க மாட்டாராம். பாஜகவின் கிளையாக இருந்த ஒரு கட்சி, தற்போது திமுகவின் கிளையாக அதிமுக மாறிவிட்டது. திமுகவும், அதிமுகவும் ஒன்று தான், இருவருக்கும் ஒரே ஓனர் தான். யாரை எதிர்த்து எம்.ஜி.ஆர் கட்சி தொடங்கினார்? யாரை எதிர்த்து ஜெயலலிதா அரசியல் செய்தார்?. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவை அவமானப்படுத்துவது போல் திமுகவுடன் அதிமுக சேர்ந்து சதி.

எம்.எல்.ஏ.வாக இருந்து கொண்டு சத்தியபாமா தவெகவுக்கு வரவில்லை, ராஜினாமா செய்துவிட்டுதான் வந்தார்.

இதில் எந்த பேரமும் கிடையாது. சர்க்காரியா கமிஷன் பற்றி

பேசினால் அதிமுகவுக்கு ஏன் கோபம் வருகிறது?. திமுகவுக்கு முட்டு கொடுக்கிறது அதிமுக. திமுகவை எதிர்ப்பது தவெக மட்டும்தான். தீய சக்தி திமுகவுக்கு ஓட்டு போடக்கூடாது.

மக்களுக்கு நல்லது செய்வதற்காக எந்த எல்லைக்கும் செல்வேன்.

திமுக, அதிமுகவின் பொய்களை நம்பாதீர்கள்.. எம்.ஜி.ஆர்.க்கும், ஜெயலலிதாவுக்கும் துரோகம் செய்த அதிமுகவுக்கு ஓட்டு போடுவீர்களா?.

கொங்கு மக்கள் எப்போதுமே உழைக்கும் மக்கள்.. எனவே தாராபுரம் மக்கள் அனைவரும் உங்கள் வெற்றி வேட்பாளர் சத்தியபாமாவுக்கு வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.





## பழனி நகராட்சியில் மருத்துவ முகாம்

பழனிநகராட்சியின் ஆணையர் தலைமையில் தூய்மை பணியாளர்களுக்கு """நமஸ்தே காணொளி""" காட்சியின் மூலமாக வழங்கப்பட்ட அறிவுரைகளை தெளிவாக விளக்கம் அளிக்கப்பட்டு பாதுகாப்பு உபகரணங்களை அணிந்து பணியில் ஈடுபட வேண்டும் திடக்கழிவுகளை நான்கு வகையாக பிரித்து சேகரிக்க வேண்டும் அதேபோல் பொதுமக்களையும் நான்கு வகையாக பிரித்து வழங்க அறிவுறுத்த வேண்டுமென்ற செய்தியையும் பொதுமக்கள் மற்றும் வணிகர்களுக்கு பணியாளர்கள் தினந்தோறும் பதிவு செய்ய வேண்டும் என்ற அறிவுரைகளை வழங்கியும் அவர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் டிபன் பாக்ஸ் வழங்கியும் தேனீருடன் கூடிய மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

ஆணையர் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுகாதார அலுவலர் சுகாதார ஆய்வாளர்கள் மேற்பார்வையாளர்கள் 150 க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்

தேசபக்தி



# வேடந்தாங்கல் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் பக்தர்கள் கிரிவலம்

இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் அடுத்த வேடந்தாங்கல் கிராமத்தில் அமைந்துள்ளது, வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி கோவில். இக்கோவிலில் புரட்டாசி மாத கிருத்திகையை முன்னிட்டு சுவாமிக்கு பால், தயிர், பன்னீர், இளநீர், சந்தனம், மஞ்சள் உள்ளிட்ட பல்வேறு வாசனை திரவியங்களால்சிறப்புஅபிஷேகம் நடை பெற்றது. இதனைத் தொடர்ந்து மூலவர் பல வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை நடைபெற்றது. பின்னர் சிறப்பு அலங்காரத்தில் சுப்பிரமணியசுவாமி பக்தர்களுக்கு காட்சி அளித்தார். இதில் சுற்றுவட்டாரபகுதிகளை சேர்ந்த திரளான பக்தர் கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதனையடுத்து மாலையில் சிறப்பு அலங்காரத்தில் பல்லக்கில் உற்சவர் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமி எழுந்தருளி மலையை சுற்றி கிரிவலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அப்போது முருகனின் பக்தி பாடல்களை பாடியவாறு ஏராளமான பக்தர்கள் கிரிவலம் வந்தனர்.

இதில் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பிரசாதம் மற்றும் அன்ன தானம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை வேடந்தாங்கல் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் விழா குழுவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.



# செய்யாறில் மூதாட்டியை கத்தியால் தாக்கி தாலிச் சரடு பறிப்பு; தலை, கழுத்தில் கத்திக்குத்து

## செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு ஹவுசிங் போர்டு பகுதியில் கோவிலுக்குச்சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு வீட்டிற்கு திரும்பிய மூதாட்டியை கத்தியால் தாக்கி, அவர் அணிந்திருந்த தாலிச் சரடை பறித்துச் சென்ற மர்ம நபர்களை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

செய்யாறு ஹவுசிங் போர்டுபகுதியைச்சேர்ந்த சரசு (58), கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் முடித்துவிட்டு தனியாக வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது அவரை பின்தொடர்ந்து வந்த மர்மநபர்கள், சரசுவின் கழுத்தில் அணிந்திருந்த தாலிச் சரடை பறிக்க முயன்றதாக கூறப்படுகிறது.

இதனை மூதாட்டி தடுக்க முயன்றபோது, ஆத்திரமடைந்த மர்மநபர்கள் அவரைகத்தியால் தாக்கியுள்ளனர்.

இதில் தலை மற்றும் கழுத்து உள்ளிட்ட பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டநிலையில், மூதாட்டி சம்பவ இடத்திலேயே நிலைகுலைந்து விழுந்ததாக கூறப்படுகிறது. பின்னர்மர்மநபர்கள்நகையை பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

**மருத்துவமனையில் தீவிர சிகிச்சை**

சம்பவம் குறித்து தகவல் அறிந்த போலீசார் உடனடியாக அங்கு சென்று படுகாயமடைந்த சரசுவை மீட்டு செய்யாறு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு முதலுதவி மற்றும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவருக்கு தொடர்ந்துசிகிச்சைஅளிக்கப்பட்டு வருகிறது.

**மோப்பநாய், தடயவியல் நிபுணர்கள் ஆய்வு**

சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் அப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளைஆய்வு செய்து வருகின்றனர். மேலும், சம்பவ இடத்தில் தடயவியல் நிபுணர்கள் தடயங்களை சேகரித்து ஆய்வு மேற்கொண்டனர்.

மோப்பநாய் வீரா வரவழைக்கப்பட்டு சம்பவ இடத்தில் இருந்து பல்வேறு பகுதிகளில் மோப்பம் பிடித்து சோதனை நடத்தப்பட்டது. தடயவியல் துறை நிபுணர் சொக்கநாதன் தலைமையிலான குழுவினரும் சம்பவ இடத்தில் ஆய்வு மேற்கொண்டனர்.



**மர்மநபர்களுக்கு போலீசார் வலை**

நகைக்காக தனியாகச் சென்ற 58 வயது மூதாட்டியை வழிமறித்து கத்தியால் தாக்கி நகை பறித்துச் சென்ற சம்பவம் செய்யாறு பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கண்காணிப்பு கேமரா காட்சிகள், சேகரிக்கப்பட்ட தடயங்கள் மற்றும் பிற தகவல்களின் அடிப்படையில் போலீசார் விசாரணை நடத்தி, சம்பவத்தில் தொடர்புடைய மர்ம நபர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.



கால்நடை பராமரிப்பு. பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை, அரசுச் செயலாளர் அனு ஜார்ஜ், இ.ஆ.ப., இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன்மாவட்டஆட்சியர் ந.ப்ரியாரவிச்சந்திரன், இ.ஆ.ப., கால்நடைநோய்த்தடுப்பு மருந்து நிலைய இயக்குநர் மரு.ஜா. ரூத் சோபிலா, கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் மரு.திருநாவுக்கரசு மற்றும் பலர் உள்ளனர்.



# மதுராந்தகம் இடைத்தேர்தலில் செங்குன்றம் பேரூர் திமுக நிர்வாகிகள் தீவிர வாக்கு சேகரிப்பு

மதுராந்தகம் அச்சிறுபாக்கம் ஒன்றியம் கீழாமூர் ஊராட்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் செங்குன்றம் பேரூர் கழக பொறுப்பாளர் ஆர்.டி. சுதாகர் முன்னிலையில் செங்குன்றம் பேரூர்கழகதிமுகமாவட்ட பிரதிநிதி ஆர்.டி. சுரேந்தர், ஒன்றிய பிரதிநிதி பி.அன்பு, வார்டு செயலாளர்கள் மதிவாணன், பாலாஜி, வடிவேல், நாகராஜ், எஸ்.எம். முனுசாமி, சுப்பிரமணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மதுராந்தக இடைத்தேர்தல் திமுக வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர்.

# முதலமைச்சர் கோப்பை 2026 விளையாட்டுப் போட்டிகளில் அரசு ஊழியர்கள் பிரிவில் நடைபெற்ற கபடி போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர். வியங்கனைகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், வழங்கினார்கள்






இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் முதலமைச்சர் கோப்பை 2026 விளையாட்டுப் போட்டிகளில் அரசு ஊழியர்கள் பிரிவில் நடைபெற்ற கபடி போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர். வியங்கனைகளுக்குபதக்கங்கள்மற்றும்சான்றிதழ்களை வழங்கினார்கள் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் மாவட்டஆட்சியர்அலுவலகத்தில்இன்று(30.09.2026) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம். இராணிப்பேட்டை மாவட்டப் பிரிவின் சார்பில், முதலமைச்சர் கோப்பை 2026 விளையாட்டுப் போட்டிகளில் அரசு ஊழியர்கள் பிரிவில் நடைபெற்ற கபடி போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர். வீராங்கனைகளுக்குபதக்கங்கள்மற்றும்சான்றிதழ்களை வழங்கினார்கள். ஆண்கள் கபடி பிரிவு: முதல் பரிசு காவல்துறை ஆண்கள் அணி, இரண்டாம் பரிசு அரசு மருத்துவமனை, வாலாஜா அணி, மூன்றாம் பரிசு அரக்கோணம் ஆசிரியர்கள் ஆண்கள் அணி பெண்கள் கபடி பிரிவு: முதல் பரிசு காவல்துறை பெண்கள் அணி, இரண்டாம் பரிசு எல்.எஃப்.சி. மகளிர் பள்ளி ஆசிரியைகள் 'A' அணி, மூன்றாம் பரிசு எல்.எஃப்.சி. மகளிர் பள்ளி ஆசிரியைகள் B அணி இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.ஞானசேகரன் மற்றும் பலர் உள்ளனர்.

தேனிமாவட்டஆட்சியர்அலுவலகக்கூட்டரங்கில் 28.09.2026 மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உயர்வுக்குப்படி வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

அரசுப் பள்ளிகளில் 12ஆம் வகுப்பு படித்த முடித்த அனைத்து மாணவ, மாணவியர்களும் உயர்கல்வி பயிலுவதை உறுதிசெய்யும் நோக்கில் தேனி மாவட்டத்தில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்து முடித்த மாணவர்கள், தேர்ச்சி பெற்றும் உயர்கல்விக்கு விண்ணப்பிக்காத மாணவர்களை கண்டறிந்து அவர்கள் உயர்கல்வி பயிலுவதை உறுதி செய்யும் வகையில் உயர்வுக்குப்படி வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்,பொறியியல்கல்லூரிகளின்முதல்வர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர், திறன் மேம்பாட்டுக் கழக உதவி இயக்குநர், முன்னோடி வங்கி மேலாளர், சட்டக்கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உயர்கல்வி பயிலுவதன் முக்கியத்துவம் குறித்து ஆலோசனைகள்மற்றும்அறிவுரைகள்வழங்கினார்கள். மேலும், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மூலம் உதவி மையங்கள் அமைத்து, பாடப்பிரிவுகளின் விபரங்கள், வேலைவாய்ப்பு குறித்த விபரங்கள் போன்றவை குறித்து எடுத்துரைக்கப்பட்டு, 51 மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியில்மாவட்டமுதன்மைக்கல்வி அலுவலர் திரு.முருகன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு.ரமாபிரபா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.நேதாஜி உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# செய்யாறு அமரராஜா பேட்டரி ஆலையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

## தொழிற்சங்க உரிமை, பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சிஐடியு போராட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சிப்காட் தொழிற்பேட்டையில் செயல்பட்டு வரும் அமரராஜா குழுமத்தின் பேட்டரி மறுசுழற்சி நிறுவனத்தில் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளைகண்டித்தும், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்க வலியுறுத்தியும் தொழிலாளர்கள் புதன்கிழமை வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கினர்.

செய்யாறு அடுத்த மாங்கால் கூட்ரோடு பகுதியில் நடைபெற்ற போராட்டத்தில் சிஐடியு மாநில துணைப் பொதுச் செயலாளர் இ.முத்துக்குமார், மாவட்ட நிர்வாகிகள் வே.சங்கர், டி.வெங்கடேசன், பூபாலன் உள்ளிட்டசிஐடியுநிர்வாகிகள் மற்றும்ஏராளமானதொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

**பேட்டரி மறுசுழற்சி ஆலை**

செய்யாறு சிப்காட் தொழிற்பேட்டையில் செயல்பட்டு வரும் அமரராஜா குழுமத்தின் பேட்டரி மறுசுழற்சி ஆலையில், பயன்படுத்தப்பட்ட லீட்ஆசிட் பேட்டரிகளில் இருந்து ஈயம் மீட்கப்பட்டு, அவை மீண்டும் புதிய பேட்டரிகள் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்றன.

பயன்படுத்தப்பட்ட லீட்ஆசிட் பேட்டரிகள் முறையாக கையாளப்படாவிட்டால் ஈயம் உள்ளிட்ட அபாயகரமான பொருட்களால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. இதனால், பேட்டரி மறுசுழற்சி போன்ற தொழிற்சாலைகளில் காற்று மாசு கட்டுப்பாடு, நீர்பயன்பாடு, அபாயகரமான கழிவு மேலாண்மை, தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு ஆகியவற்றில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என செய்யாறு பகுதி மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

**பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டும்**

இதனிடையே, நிறுவன அதிகாரிகள் பயன்படுத்தும் தரமான பாதுகாப்பு உபகரணங்களை, ரசாயனங்கள் மற்றும் அபாயகரமான பொருட்களை நேரடியாக கையாளும் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும் என தொழிலாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்




டுள்ளது.

மேலும், தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதுடன், பணியிடங்களில் உரிய பாதுகாப்பு விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட துறையினர் உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**சிஐடியு வலியுறுத்திய கோரிக்கைகள்**

போராட்டத்தில் பேசிய சிஐடியு மாநில துணைப் பொதுச் செயலாளர் இ.முத்துக்குமார், தொழிலாளர்கள் தங்களது சங்கத்தை அமைக்கும் உரிமையை நிர்வாகம் மறுக்கக் கூடாது என்றும், அபாயகரமான பணிகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யாமல் ஈடுபடுத்தக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

தொழிலாளர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும். தொழிலாளர்களை அச்சுறுத்தி போட்டித் தொழிற்சங்கத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. தொழிற்சங்கம் அமைப்பது தொடர்பான நடவடிக்கைகளில் நிறுவனத்தின் புகாரின் அடிப்படையில் தொழிலாளர்களை அச்சுறுத்துவதாக கூறப்படும் தூசி காவல் நிலையத்தின் அணுகுமுறை மாற்றப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், தொழிற்சாலை விதிமுறைகள் மற்றும் சட்டங்களுக்கு புறம்பான உற்பத்தி நடவடிக்கைகள் குறித்து தொழிற்சாலைத் துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுடன் அமரராஜா நிர்வாகமும் தமிழக அரசின் தொழிலாளர் துறையும் பேச்சுவார்த்தை நடத்தி சுமூகத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொழிலாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் வரை போராட்டத்தை தொடர்வது குறித்து தொழிலாளர்கள் மற்றும் சிஐடியு நிர்வாகிகள் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

# இந்து மக்கள் கட்சி சார்பில் வரும் புரட்டாசி அமாவாசைக்கு முன்னோர்களுக்கு திதி தர்பணம் கொடுக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருமாறு ஆட்சித்தலைவரிடம் மனு!

இந்து மக்கள் கட்சி தமிழகம் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் மகாளயபட்சம் புரட்டாசி அமாவாசை அன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்துக்கள் தங்கள் முன்னோர்களுக்கு வழிபாடு செய்வது வழக்கம். எள்ளு வாழை இலை தர்ப்பை பூணூல் வாழைக்காய் பழ வகைகள்காய்கறி வகைகள் அகத்திக்கீரை, பச்சை அரிசி, வெல்லம் முன்னோர்கள் விரும்பிய உணவுகள் வஸ்திர தானங்கள்அனைத்தும் படையல் வைத்து ஆற்றங்கரை ஓரத்திலோ, அல்லது குளக்கரையிலோ அல்லது கோவில்அருகிலோபூஜை செய்வது வழக்கம் இந்த ஆண்டு வருகின்ற 10.10.2026 சனிக்கிழமை மகாலயபட்சம் நாட்களில் முன்னோர்களுக்கு திதி தர்ப்பணம் கொடுக்கப்பட்டு பித்ருக்கள் ஆசி பெறுவதாக ஐதீகம் ஒவ்வொரு ஆண்டும் இந்துக்கள் தங்களுடைய இறந்து போன முன்னோர்கள் பித்ருக்களுக்கு மகாளயபட்சம் புரட்டாசி அமாவாசை சனிக்கிழமை அன்று காலை 4 மணி முதல் முன்னோர்களுக்கு திதி தர்ப்பணம் கொடுக்க ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வழிபாடு செய்ய வருகின்றார்கள். அவர்களுக்கு போதிய அடிப்படை வசதிகள் இல்லாமல் தவித்து வருகிறார்கள். எனவே அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். தண்ணீர் டேங்க் வசதி செய்து கொடுக்க வேண்டும் திதி கொடுக்கும் இடத்தை தூய்மை செய்து சார்மினா பந்தல் அமைத்து சுகாதாரப் பணிகள் செய்து தர வேண்டும். காலை 4 மணி முதலே பக்தர்கள் வருவதால் மின்விளக்கு வசதி ஏற்பாடு செய்து தர வேண்டும் என இந்து மக்கள் கட்சி சார்பாக கேட்டுக் கொள்கிறோம்

சென்ற ஆண்டு 2025 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அனைத்து நகராட்சி ஊராட்சி பேரூராட்சி மூலமாக சிறப்பாக செய்து கொடுத்தார்கள் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திதி தர்ப்பணம் கொடுக்கும் இடங்கள் வாலாஜா வன்னிவேடு அருள்மிகு அகத்தீஸ்வரர் கோவில்அருகில்கோவில் இடது புறமாக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து திதி தர்ப்பணம் கொடுக்கப்பட்டு வருகிறது இந்த ஆண்டு மகாளயபட்சம் புரட்டாசி சனிக்கிழமை வருகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்ள இருப்பதால் இந்துக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் மேற்கண்ட இடத்தை தூய்மை செய்து ஜேசிபி மூலமாக முள் புதர்களை எல்லாம் அப்புறப்படுத்தி தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று ஆற்காடு பாலாற்றங்கரை காரிய மேடை அருகில் திதி தர்ப்பணம் கொடுக்க தண்ணீர் டேங்க் மூலமாக தண்ணீர் கொடுத்து உதவிட வேண்டும். மின்விளக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும். அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என ஆட்சி தலைவரின் நேர்முக உதவியாளர் திருமதி பாக்யலட்சுமி அவர்களி





டம் இந்து மக்கள் கட்சியின் சார்பாக வேலூர் கோட்ட தலைவர் எஸ் கே மோகன் தலைமையில் இராணிப்பேட்டை மாவட்ட செயலாளர் பார்த்திபன், ஆன்மீக பிரிவு மாவட்ட தலைவர் சீதர்,வாலாஜா ஒன்றிய பொதுச் செயலாளர் குமார், வாலாஜா கிழக்கு ஒன்றிய தலைவர் அன்பழகன், வாலாஜா மேற்கு ஒன்றிய தலைவர் பிரபாகரன், வாலாஜா ஒன்றிய செயலாளர் மணிவண்ணன், வாலாஜா நகர பொறுப்பாளர் சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டு மனு அளித்தனர்.

# செய்யாறு நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகராட்சியில் தூய்மையே சேவை 2026 நிகழ்சியின் ஒரு பகுதியாக நகராட்சி யில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம் நேற்று காலை நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் நகரமன்ற தலைவர், ஆ.மோகனவேல், ஆணையாளர், செ.ஆண்ரூஸ் ஆகியோர் முன்னிலையில் வட்டார மருத்துவ அலுவலர் ஏ. சி.ஷர்மிளா தலைமையிலான மருத்துவ குழுவினர் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 110 நபர்களுக்கு பொது மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், சித்த மருத்துவம், இயன்முறை வைத்தியம் மற்றும் ரத்த கொதிப்பு மற்றும் சக்கரை நோய் கண்டறியும் பரிசோதனைகள் செய்யப்பட்டது. மேலும் தூய்மை பணியாளர்களுக்கு தூய்மையே சேவை குறித்தும், தன்சுத்தம் மற்றும் உணவு கட்டுபாடுகள் குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் நகராட்சி பொறியாளர் பி. சிசில் தாமஸ், மருத்துவ குழுவினர்கள் மற்றும் நகராட்சி அலுவலக பணியாளர்கள் தூய்மை பணியாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.




இராணிப்பேட்டை மாவட்டம் அரசு பள்ளிகளில் 100% வருகை புரிந்த மாணவர்களையும், வகுப்பறை தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் அடையும் மாணவர்களை அங்கீகரித்து தொடர்ந்து கற்றலை மகிழ்வானதாக மாற்றவும் மாவட்டநிர்வாகம்மற்றும்பள்ளிக்கல்வித்துறைஇணைந்துமுகுந்தராயபுரம் BHEL கலையரங்கில் (29.09.2026) மற்றும் (30.09.2026) 200 மாணாக்கர்களுக்கு காலாண்டு தேர்வு விடுமுறை நாளில் இலவசமாக ஃபைண்டிங் நீமோ, ஜுராசிக் பார்க், தி வெல்டு ரோபோ ஆகிய குழந்தைகளுக்கான திரைப்படம் காண்பிக்கப்பட்டது. உடன் முதன்மை கல்வி அலுவலர் திருமதி.மோகனா மற்றும் பலர் உள்ளனர்.




# நத்தத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆர்ப்பாட்டம்

நத்தம் பஸ்நிலைய ரவுண்டானா முன்பாக விடுதலை சிறுத்தைகள்கட்சி சார்பில் கோமனாம்பட்டி கிராமத்தில் தலித் மக்களை கோவிலுக்குள் அனுமதிக்காதது உள்ளிட்ட ஏழு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கிழக்கு மாவட்ட செயலாளர் தமிழ்முகம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் திண்டுக்கல் மாவட்ட செயலாளர்கள் மைதீன்பாவா, தமிழரசன், மாவட்ட துணை செயலாளர்கள் மயில்ராஜ், பூமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை தேர்தல்: அக்டோபர் 16ல் சிறப்பு பொதுப்பேரவைக் கூட்டம்

திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தலைவர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு, சிறப்பு பொதுப்பேரவைக் கூட்டம் அக்டோபர் 16ம் தேதி நடைபெற உள்ளதாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988ன் அடிப்படையிலும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படியும் இந்த சிறப்பு பொதுப் பேரவைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதன்படி, வரும் 16.10.2026 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு, திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் திருமண மண்டப வளாகத்தில் சிறப்பு பொதுப்பேரவைக் கூட்டம் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் தகுதியற்ற உறுப்பினர்களை நீக்குதல் மற்றும் தகுதியற்ற உறுப்பினர்களை நீக்கி, தகுதியான உறுப்பினர்களை உள்ளடக்கிய புதிய உறுப்பினர் பட்டியலைத் தயாரித்தல் உள்ளிட்ட முக்கியப் பொருட்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளன. எனவே, ஆலையின் அனைத்து அங்கத்தினர்களும் தவறாமல் கலந்து கொண்டு தங்களது ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்கி சிறப்பு பொதுப்பேரவைக் கூட்டத்தை சிறப்பாக நடத்தித் தருமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.

**இறப்புக்கு முன்**
**ரத்த தானம்**
**இறப்புக்கு பின்**
**கண் தானம்**

# செய்யாறில் புத்தகத் திருவிழா: சப் கலெக்டர் எல் .அம்பிகா ஜெயின் துவக்கி வைத்தார்

செய்யாறில் புத்தகத்திருவிழா (புத்தகங்கள் கண்காட்சி) துவக்க விழா நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு ஆர்.சி. எம். பள்ளி வளாகத்தில் செய்யாறு புத்தகத் திருவிழா நேற்று விமர்சையாக துவக்கி வைக்கப்பட்டது.






செய்யாறு வட்ட முத்தமிழ்ச் சங்கம் ஆரணி அறம் பதிப்பகம் இணைந்து ஒருங்கிணைக்கும் நேற்றைய துவக்க விழாவிற்கு செய்யாறு வட்ட முத்தமிழ் சங்க நிறுவனத் தலைவர் எறும்பூர் கை.செ ல்வகுமார் தலைமை தாங்கினார். துணை செயலாளர் ஜே. பாபு வரவேற்றார் . ஆரணி அறம் பதிப்பகத்தின் உரிமையாளர் மா. அமரேசன் நோக்க உரை நிகழ்த்தினார். முன்னதாக தொழிலதிபரும், கல்வியாளருமான வழக்கறிஞர் பா. ஜெயக்குமார் குத்துவிளக்கு ஏற்றி வைத்தார். செய்யாறு புத்தகத் திருவிழாவை முறைப்படி செய்யாறு சப் கலெக்டர் எல். அம்பிகா ஜெயின் துவக்கி வைத்து, முதல் புத்தகத்தை வாங்கி விற்பனையை துவக்கி வைத்து வாழ்த்து தெரிவித்தார்.

நகராட்சி ஆணையாளர் சே .ஆண்ட்ரூஸ், வட்டாட்சியர் சீ. திருவேங்கடம், கோட்டகலால் அலுவலர் சம்பத்குமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர். பங்குத்தந்தை அ. சுதர்சன் ,அனைத்து வணிகர் சங்க தலைவர் எம். புகழேந்தி, வழக்கறிஞர் சக்தி ,ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சங்கத் துணைத் தலைவர் எம். சுந்தரமூர்த்தி, செயற்குழு உறுப்பினர்கள் ஏ .காந்திமதி, க. வெங்கடேசன், அனைத்து அரசு ஊழியர் ஒய்வூதியர் சங்க துணைத் தலைவர் ஆர். பலராமன், பொருளாளர் சூர்யமூர்த்தி, வருவாய் ஆய்வாளர்கள் ராஜேஷ், திருமால் மருகன், உள்ளிட்ட பலர்கலந்துகொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் தமிழ் சங்கத்தின் பொருளாளர் க. கோவேந்தன் நன்றி கூறினார்.




இராணிப்பேட்டைமாவட்டத்தில்பணியாற்றியகாவல்உதவிஆய்வாளர் திரு.ரா.ராஜன் தாகூர் சிறப்பாக பணிபுரிந்து பணி மூப்பு அடைந்து ஓய்வு பெறுகின்றனர்.பணிஓய்வுபெறும்நபரைமாவட்டகாவல்கண்காணிப்பாளர் பே.சிபின்,இ.கா.ப., அவர்கள் நேரில் அழைத்து பொன்னாடை போர்த்தி பாராட்டு சான்றிதழ் வழங்கி பணி நிறைவு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# 10ம் தேதி செய்யாறில் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம்

## 150க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் பங்கேற்பு - ஆட்சியர் வந்தனா கார்க் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டத்தில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில், வரும் 10.10.2026 அன்று செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. இதையொட்டி, முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில் இன்று (30.09.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து நடத்தும் இந்த வேலைவாய்ப்பு முகாம்காலை9மணிக்கு தொடங்க உள்ளது. இதில் 150க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் மற்றும் திறன் பயிற்சி நிறுவனங்கள் பங்கேற்க உள்ளன. கூட்டத்தில், வேலைவாய்ப்பு முகாம் நடைபெறும் இடத்தில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது, வேலை நாடுநர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது,மாணவ, மாணவியர்களிடையே வேலைவாய்ப்பு முகாம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது குறித்து ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார்.முகாம் நடைபெறும் இடத்தில் மருத்துவக் குழுக்கள் மற்றும் 108 அவசர ஊர்தியை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும், தடையற்ற மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். வேலை நாடுநர்களின் வசதிக்காக போதிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துதல், மாற்றுத்திறனாளிகள் நேர்காணலில்பங்கேற்க ஏதுவாக சக்கர நாற்காலி உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்துதல், தடையற்ற குடிநீர் மற்றும் கழிவறை வசதிகளை உறுதி செய்தல், வகுப்பறைகளை தூய்மையாக பராமரித்தல், உதவி மையம் அமைத்தல் உள்ளிட்ட பணிகளையும் முறையாக மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், வேலைவாய்ப்பு முகாம் தொடர்பான விழிப்புணர்வு பதாகைகளை முக்கிய இடங்களில் அமைப்பதுடன், கிராமப்புறங்களிலும் முகாம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும், அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வேலைவாய்ப்பு முகாமை சிறப்பாக நடத்த வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார். இக்கூட்டத்தில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் யோகலட்சுமி, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர்கள் மோகன்ராஜ், விஜயலட்சுமி மற்றும்துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீஆறுமுகசாமி சித்தர் பீடம் அறக்கட்டளை சார்பில் கிருத்திகை முன்னிட்டு அன்னதானம்




ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு அடுத்த தாஜ்புரா ஸ்ரீ ஆறுமுகசாமி. சித்தர் பீடம் அறக்கட்டளை சார்பில் கிருத்திகை முன்னிட்டு 30.09.26 புதன்கிழமை 19 வது மாதமாக பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அறக்கட்டளையின் கௌரவத் தலைவரும், தாஜ்புரா முன்னாள் ஊராட்சி மன்ற தலைவருமான ம.சேட்டு கலந்து கொண்டு அன்னதானநிகழ்ச்சியைதுவக்கிவைத்தார்.முன்னதாக ஸ்ரீஆறுமுகசாமி சித்தரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து சிறப்பு பூஜை செய்து அன்னதான நிகழ்ச்சி துவக்கி வைத்தனர். இதில் செயல் தலைவர்கள் மோகனவேலு, சிவக்குமார், தலைவர் பா.ஞானசேகரன், செயலாளர் எஸ்.ஆர். பாஸ்கரன், பொருளாளர்த.நந்தகோபால் துணைதலைவர்கள் ம.ரஜினிகாந்த், ஜே.சரவணன், துணைசெயலாளர் கு. கோகுல்நாத், மு.பச்சையப்பன், அமைப்பாளர் எஸ்.தமிழரசன், சுபாஷ், வளர்மதி, லட்சுமி,மலர்க்கொடி,ஜெயந்தி, சரஸ்வதி, சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் பா.ராஜா மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதில் சுமார் 1000 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# புதிய நீர்ப்பாசன திட்டங்கள், அணைகள் வேண்டும்; காவல்துறையில் கூடுதல் பணியிடங்களை உருவாக்க வேண்டும்

## திருவண்ணாமலையில் சௌமியா அன்புமணி வலியுறுத்தல்

திருவண்ணாமலையில் கிரிவலப் பாதையில் ரூ.40 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட இரண்டு சுகாதார வளாகங்களை பசுமைத்தாயக தலைவர் சௌமியா அன்புமணி திறந்து வைத்தார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை செயல்படுத்துவதுடன், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தினார்.

பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் தொகுதி நிதியின் கீழ் திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் இரண்டு சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன. இதன் திறப்பு விழா நடைபெற்றது. இதில் சௌமியா அன்புமணி கலந்து கொண்டுரிப்பன்வெட்டி சுகாதார வளாகங்களை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

நீர்ப்பாசன திட்டங்களுக்கு முக்கியத்துவம் தமிழகத்தில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அரசு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்குவதுடன், ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களை முழுமையாக செயல்படுத்த வேண்டும். பல பகுதிகளில் கால்வாய்கள், ஏரிகள் மற்றும் குளங்கள் முறையாக தூர்வாரப்படாமல் உள்ளன. இதனால் மழைக் காலங்களில் கிடைக்கும் நீரை முழுமையாக சேமிக்க முடியாத நிலை



ஏற்படுகிறது. எனவே, நீர் நிலைகளை தூர்வாரி சீரமைத்து, மழைநீரை சேமிப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

மேலும், தேவையான இடங்களில் புதிய அணைகளை கட்டுவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் விவசாயத்துக்கு தேவையான நீரை சேமித்து பயன்படுத்துவதுடன், நிலத்தடி நீர்மட்டத்தையும் பாதுகாக்க முடியும்.

காவல்துறையில் கூடுதல் பணியிடங்கள்

தமிழகத்தில் காவல்துறையின் பணிச்சுமையை கருத்தில் கொண்டு கூடுதல் பணியிடங்களை உருவாக்கவேண்டும். காலிப் பணியிடங்களை விரைந்துநிரப்புவதுடன், தேவையான அளவில் புதிய பணியிடங்களையும் உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், ஏற்கனவே உள்ள ஊர்க்காவல் படையினரை முழுமையாக பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். காவல்துறைக்கு தேவையான மனிதவளத்தை அதிகரித்து, சட்டம்ஒழுங்கு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு பணிகளை மேலும் சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

இந்த நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டால் தமிழக காவல்துறையின் செயல்பாடுகள் மேலும் வலுப்பெறும் என சௌமியா அன்புமணி தெரிவித்தார்.

மதுக்கடைகளை படிப்படியாக மூட வேண்டும்

தமிழகத்தில் மதுவால் ஏற்படும் சமூக பாதிப்புகளைகருத்தில்கொண்டு, மதுக்கடைகளை படிப்படியாக மூடி மது இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதே பாட்டாளி மக்கள் கட்சியின் நீண்டகால கோரிக்கையாக உள்ளது.

மதுக்கடைகளை ஒரே நாளில் மூடுவது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதைவிட, படிப்படியாக மதுக்கடைகளை குறைத்து, மாற்று நடவடிக்கைகளுடன் மதுவிலக்கை நோக்கி அரசு பயணிக்க வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்றும் சௌமியா அன்புமணி தெரிவித்தார்.

பக்தர்கள் பயன்பாட்டுக்கு சுகாதார வளாகங்கள்

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். பௌர்ணமி, கிரிவலம் உள்ளிட்ட முக்கிய நாட்களில் பக்தர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கிறது. இதனை கருத்தில் கொண்டு கிரிவலப் பாதையில் பக்தர்களின் அடிப்படை தேவைகளுக்கான வசதிகளை மேம்படுத்துவது அவசியமாக உள்ளது. அதன் ஒரு பகுதியாக, பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் தொகுதி நிதியின் கீழ் ரூ.40 லட்சம் மதிப்பில் இரண்டு சுகாதார வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் பாலசுப்ரமணியம், பாமக தெற்கு மாவட்ட செயலாளர் பக்தவச்சலம், மேற்கு மாவட்ட செயலாளர் பாண்டியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர பாமக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.








இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் திருமதி.ந.ப்ரியாரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டம் ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பெ.சிபின் இ.கா.ப., ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திருமதி.பாக்கியலட்சுமி (பொது), திருமதி. சுமதி (நிலம்) மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# 21 வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு எப்போது வீடு? மழைக்காலத்தில் தவிக்கும் மக்களுக்கு மாற்று இடம் ஒதுக்க வேண்டும்

## தலித் தலைவர் அன்பரசன் கவலை

கோலார்தங்கவயல்பகுதியில்ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணிகள் ஒருபுறம் வேகமெடுத்து வரும் நிலையில், அந்தப் பணிக்காக தங்களது வீடுகளை இழந்த 21 குடும்பங்களின் எதிர்காலம் என்ன என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

பல ஆண்டுகளாக தங்களது குடும்பங்களுடன் வசித்து வந்த வீடுகள் இடிக்கப்பட்ட நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தற்போது பாதுகாப்பான குடியிருப்பு இல்லாமல் தவிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தலித் தலைவர் அன்பரசன் கவலை தெரிவித்துள்ளார்.



ரயில்வே மேம்பாலம் என்பது அந்தப் பகுதி மக்களின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான முக்கியமான வளர்ச்சிப் பணியாக இருக்கலாம்.

ஆனால், அந்த வளர்ச்சிப் பணிக்காக வீடுகளை இழந்த மக்களின் மறுவாழ்வு நடவடிக்கைகள் என்ன?

அவர்களுக்கு மாற்று இடம் எங்கே?

அவர்களுக்கு வீடுகள் எப்போது கட்டித் தரப்படும்?

மழைக்காலத்தில் அவர்கள் பாதுகாப்பாக எங்கே தங்குவார்கள்?

என்ற கேள்விகளுக்கு அரசு உடனடியாக பதில் அளிக்க வேண்டும் என அன்பரசன் வலியுறுத்தியுள்ளார்.

மழைக்காலத்தில் அதிகரிக்கும் கவலை

தற்போது மழைக்காலம் நிலவி வரும் நிலையில், வீடுகளை இழந்த குடும்பங்களின் நிலை மேலும் கவலைக்குரியதாக மாறியுள்ளது.

குறிப்பாக குழந்தைகள், பெண்கள் மற்றும் வயதானவர்கள் பாதுகாப்பான குடியிருப்பு வசதியின்றி சிரமப்பட வேண்டிய நிலை உருவாகக் கூடாது என்பதே அப்பகுதி மக்களின் கவலையாக உள்ளது.

வீடு என்பது வெறும் கட்டிடம் மட்டுமல்ல.

ஒரு குடும்பத்தின் பாதுகாப்பு. பல ஆண்டுகளாக சேமித்து உருவாக்கிய வாழ்க்கை. குழந்தைகளின் நினைவுகள். ஒரு குடும்பத்தின் எதிர்கால நம்பிக்கை.

அந்த வீடு இடிக்கப்பட்ட பின்னர், அந்த குடும்பங்களுக்கு அடுத்ததாக என்ன செய்வது என்பது குறித்த உறுதியான நடவடிக்கை அவசியம் என அன்பரசன் தெரிவித்துள்ளார். “மேம்பாலப் பணிகள் நடைபெறட்டும்... மக்களை கைவிடக்கூடாது”

ரயில்வே மேம்பாலப் பணிகளை தாம் எதிர்க்கவில்லை என்றும், அதே நேரத்தில் வளர்ச்சிப் பணிக்காக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அன்பரசன் தெரிவித்துள்ளார். “ரயில்வே மேம்பாலம் கட்டப்படுவது பொதுமக்களின் போக்குவரத்து வசதிக்காகத்தான். அந்தப் பணிகள் நடைபெறட்டும். ஆனால், அந்தப் பணிக்காக வீடுகளை இழந்த 21 குடும்பங்களையும் அரசு கைவிடக்கூடாது. அவர்களுக்கு உடனடியாக மாற்று இடம் ஒதுக்க வேண்டும். தங்கவயல் பகுதியில் அல்லது அருகிலுள்ள பொருத்தமான இடத்தில் நிலம் ஒதுக்கி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டும்” என்று அன்பரசன் கவலை தெரிவித்துள்ளார். மேலும், மழைக்காலத்தில் வீடின்றி தவிக்கும் சூழ்நிலை ஏற்படாமல், குறைந்தபட்சம் தற்காலிக பாதுகாப்பான தங்குமிட வசதியாவது உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வளர்ச்சியும்... மனிதநேயமும்

ஒரு நகரத்தின் வளர்ச்சிக்கு சாலைகள், பாலங்கள், ரயில்வே மேம்பாலங்கள் அவசியம்.

ஆனால் அந்த வளர்ச்சியின் பாதையில் தங்களது வீடுகளை இழக்கும் மக்களின் வாழ்க்கையும் அதே அளவு முக்கியமானது.

ஒரு பக்கம் ரயில்வே மேம்பாலத்திற்கான கட்டுமானப் பணிகள். மற்றொரு பக்கம் வீடுகளை இழந்து எதிர்காலத்தை எதிர்நோக்கும் 21 குடும்பங்கள்.

இந்த இரண்டுக்கும் இடையில் ஒரு மனிதநேயமான தீர்வு தேவை என்பதே அன்பரசனின் கருத்தாக உள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீட்டு வசதி கிடைக்கும் வரை அவர்களுக்கு தேவையான அடிப்படை பாதுகாப்பு மற்றும் தங்குமிட வசதிகளை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். அரசின் நடவடிக்கையை எதிர்பார்க்கும் குடும்பங்கள்

வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு மாற்று இடம் ஒதுக்குவது குறித்து அரசு விரைவான முடிவை எடுக்க வேண்டும்.

நிலம் ஒதுக்கப்பட்டால், அதன்பின்னர் வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகளையும் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

அதுவரை மழை, வெயில் உள்ளிட்ட இயற்கை பாதிப்புகளில் இருந்து குடும்பங்களை பாதுகாப்பது தொடர்பாகவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.ரயில்வே மேம்பாலம் மக்களுக்கு பயனளிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அந்த மேம்பாலம் உருவாகும் போது, அதற்காக தங்கள் வீடுகளை இழந்த மக்களின் வாழ்க்கையும் இருளில் விடப்படக் கூடாது” என்பதே தலித் தலைவர் அன்பரசனின் கவலையாக உள்ளது.

சிறப்பு பார்வை

வளர்ச்சிப் பணிகள் ஒரு நகரத்தின் எதிர்காலத்தை மாற்றும். ஆனால் அந்த வளர்ச்சிக்காக பாதிக்கப்படும் குடும்பங்களின் எதிர்காலத்தையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். 21 குடும்பங்கள் வீடுகளை இழந்துள்ள நிலையில், “அவர்களுக்கு வீடு எப்போது?” என்ற கேள்வி தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ளது. மழைக்காலம் என்பதால் இந்தக் கேள்வி மேலும் அவசரமானதாக மாறியுள்ளது. தங்கவயல் பகுதியில் பொருத்தமான இடத்தை அடையாளம் கண்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாற்று குடியிருப்பு ஏற்பாடு செய்து தர வேண்டும். ரயில்வே மேம்பாலம் கட்டப்படட்டும்...

நகரமும் வளரட்டும்...

அதே நேரத்தில், அந்த வளர்ச்சிக்காக வீடுகளை இழந்த மக்களின் வாழ்க்கையும் பாதுகாக்கப்படட்டும். வளர்ச்சியுடன் மனிதநேயமும் இணைந்தால்தான் அது முழுமையான வளர்ச்சியாகும். 21 குடும்பங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? அரசின் அடுத்தகட்ட நடவடிக்கையை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர் பாதிக்கப்பட்ட குடும்பங்கள்.

# வடகிழக்கு பருவமழை எதிரொலி: பழுதடைந்த சாலைகளை உடனடியாக சீரமைக்க வேண்டும்

## ஆட்சியர் வந்தனா கார்க் அதிரடி உத்தரவு

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சிமற்றும்ஊராட்சி துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளையும் விரைந்து முடித்து, பொதுமக்களுக்கு அதன் பயன்கள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (30.09.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் குடிநீர் விநியோகம், திடக்கழிவு மேலாண்மை, தனிநபர் கழிப்பறைகள் அமைத்தல், அரசு இலவச வீடு வழங்கும் திட்டம், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் புதிய வீடுகள் கட்டுதல் உள்ளிட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், TNVETRI திட்டத்தின் கீழ் குடியிருப்பு அளவில் பங்கேற்பு அடிப்படையிலான கிராமப்புற மதிப்பீடு (PRA) செயல்முறையை மேற்கொள்வது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (MLACDS), நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்




(MPLAD), VBGRAM(G) திட்டப்பணிகள், ஊரக சாலைகள் பராமரிப்பு மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்பணிநிலைகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விரிவாக கேட்டறிந்தார்.

மழைக்கால முன்னேற்பாடுகள் தீவிரம்

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் மாவட்டம் முழுவதும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர்அறிவுறுத்தினார்.

குறிப்பாக, பழுதடைந்த சாலைகளை உடனடியாக கண்டறிந்து சீரமைத்தல்,

பொதுமக்களுக்கு தடையின்றி அடிப்படை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்தல் உள்ளிட்ட அனைத்து முன்னேற்பாடுகளையும் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், ஒவ்வொரு திட்டத்தின் பணிநிலையையும் தொடர்ந்து கண்காணித்து, காலதாமதம் ஏற்படாமல் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், திட்டங்களின் பயன்கள் முழுமையாக பொதுமக்களை சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் பூ. காஞ்சனா, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) சிவநாத், உதவி திட்ட அலுவலர்கள், உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை), உதவி செயற்பொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி பொறியாளர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றிய பணிமேற்பார்வையாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA